அ.சா .1.சிவமணி, த/பெ.பெரியசாமி

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) நான் **m.sc** படித்துள்ளேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். நான் வழக்கு நிதி நிறுவனத்தை தவிர மற்றொரு நிதி நிறுவனத்திலும் பங்கு தாரராக இருந்து வருகிறேன். மேற்படி எதிரி எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 10 வருடமாக பழக்கம். எதிரி சிவக்குமார் மூலமாகதான் எனக்கு பழக்கம். சிவக்குமாரும் மேற்படி எதிரியும் இணைந்து தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. சிவக்குமார் **software company** யில் பணிபுரிந்து வந்தார். தற்போதும் **software company** யில் பணிபுரிந்து வருகிறாரா என்றால் இல்லை. சிவக்குமார் எத்தனை வருடமாக எனக்கு பழக்கம் என்றால், அவரும் 10 வருடமாக எனக்கு பழக்கம். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 2 **partnership deed** ல் வழக்கு நடத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. வழக்குத் தொகையானது சிவக்குமார் கூறியதன் அடிப்படையில் தான் கொடுத்தேனா என்றால் சரிதான். இந்த புரோட்நோட்டில் ம.சா.ஆ 3 கண்டுள்ள சங்கதிகள் கருப்பு இங்க்கினாலும், கையெழுத்து புளூ இங்க்கினாலும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த புரோநோட்டில் கையொப்பம் போட்ட மையிக்கும் காசோலையில் உ்ள்ள மையும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரியல்ல.

2) காசோலையில் உள்ள சங்கதியின் மையிற்கும் கையொப்பம் கொண்டுள்ள மையிக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டில் உள்ள கையெழுத்தின் மையும் செக்கின் காசோலையில் உள்ள மையும் ஒரே பேனாவால் நிரப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. இரண்டு மையும் ஒன்றாக தான் உள்ளது. எனது வழக்கு நிலை குழம்பிவிடும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி நான் சொன்ன

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

தேதியில் புரோநோட் எழுதி தரப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பாகவே பொறுப்பிற்காக பூர்த்தி செய்யப்படாத புரோநோட் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வழக்கு காசோலை கையொப்பம் மட்டும் இட்டு பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் எந்தவொரு தொகையும் வட்டி அல்லது அசலுக்காக எங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3) கடந்த 10.11.2020 ம் தேதி நான் எதிரிக்கு கொடுத்த 2 லட்ச ரூபாய் மற்றும் வட்டியுடன் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி தொகை கொடுத்த தேதியன்று எனது பகுதியில் மின்தடை ஏற்பட்டு இருந்தது என்றால் சரியல்ல, அதன் காரணமாக எதிரி கொடுத்த தொகைக்கு எதிரி ரசீது கேட்டும், என்னால் ரசீது வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும், எதிரி பொறுப்புக்காக கொடுத்த காசோலை மற்றும் புரோநோட் ஆகியவை கேட்டதற்கு மின்தடை காரணமாக இருட்டாக இருப்பதால் தற்சமயம் எதிரி ஆவணத்தை எடுத்து தர இயலவில்லை என்றும் பின்னர் எடுத்து தருவதாக கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அவசர வேலை நிமித்தம் ஆக 11.11.2020 ம் தேதி சென்னை சென்றுவிட்டதால், மறுநாள் எதிரி வந்து கேட்க வில்லை என்றால் சரியல்ல.

4) அதன் பின்னிட்டு பலமுறை ரசீதும் அதை ஏற்படுத்தி கொடுத்த ஆவணத்தையும் கேட்டதற்கு நித்தம் ஒரு காரணம் கூறி காலம் தாழ்த்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது நண்பர் சிவக்குமார் எதிரிக்கும் நண்பர் என்பதால் அவர் நடத்தி வந்த நிறுவனத்தில் நிர்வாக பங்கு தாரராக இருந்து நடத்தி வந்ததில் சிவக்குமார் பணத்தை எடுத்தி வந்ததின் காரணமாக எதிரி நடத்தி வந்த நிறுவனத்தை மூடிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் சிவக்குமாரின் நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க என்னிடம் உள்ள காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த தொகையும் எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

**மறுவிசாரணை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.